வெளியீடு எண். 367

ஞானாவரண விளக்கமும்

மாபாடியமும்

(முதல் மூன்று பாகம்)

1. பரபக்கம் 2. ஞானாந்தம் 3. அளவியல்

உரிமைப் பதிவு] 1957 [தருமபுர ஆதீனம்

உ


ஞானாவரண விளக்கமும்

வெள்ளியம்பலவாண மாபாடியமும்

உ

குருபாதம்

துன்முகி ஆண்டு வைகாசித் திங்கள் 17ஆம் நாள் (30—5—'56) புதவாரத்தன்று ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்குரிய குருபூஜை விழா மலராக வேளியிடப்பேற்ற இந்த ஞானுவரண விளக்கமும் வேள்ளியம்பலவாண மாபாடியமுமான நூல் இஞ்ஞான்று ஹேவிளம்பி ஆண்டு ஆவணி மூல (3—9—1957 மங்கள வாரம்) நன்னுளில் கட்டடம் செய்யப்பேற்றுச் சைவசித்தாந்த நல்லுலகில் திருவுலா வர முற்படுகிறது.



தருமபுர ஆதீன குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

வேளியீடு எண். 367

உ

குருபாதம்

ஆதீன குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய

ஞானாவரண விளக்கமும்

வெள்ளியம்பலவாண சுவாமிகள் அருளிய

மாபாடியமும்

(முதல் மூன்றுபாகம்)

1. பரபக்கம் 2. ஞானாந்தம் 3. அளவியல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-ஆவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்
திருவுளப்பாங்கின்வண்ணம் வேளியிடப்பேற்றது.

 1957 [தருமபுர ஆதீனம்

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

நூன்முகம்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தான வழிவந்த சித்தாந்த சாஸ்திரம் பதினான்கு. அவற்றுள் சில மிகச் சுருக்கமாய் நுண்ணறிவும் தீவிரதர சத்திநிபாதமுமுடைய பெரியவர்களுக்கே அரிதில் உணரத்தக்கன. மற்றும் சில சாஸ்திரத்தில் விளக்கப்படவேண்டிய விஷயங்களுள் சிலவற்றை மட்டும் கூறிப் போந்தன. ஸ்ரீ அருணந்திதேவ நாயனார் இயற்றிய சிவஞான சித்தியாரோ பரபக்கம், அளவியல், சுபக்கம் இவைகளையும் இவற்றில் விளக்கப்பட வேண்டிய எல்லா விஷயங்களையும் விரிவாகவும் தெளிவாகவும் கூறுகிறது. ஆகையினாலேயே "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்" என்ற தனிப்புகழ்பெற்று விளங்குவதுமன்றி எங்கள் ஆதீனத்தில் பிரமாண நூல்களுள் தலைசிறந்ததாகப் போற்றப்படுகிறது.

ஆதீன குருமுதல்வர் சிறந்த அநுபூதிமான். தான்பெற்ற இன்பம் இவ் வையகம் பெறுக என்ற பெருங்கருணைகொண்டு சிவஞானசித்தியார் அளவிலும் விரித்துணர்த்தப்படும் விஷயங்களிலும் மிக விரிந்ததேயாயினும் அதிலும் கூறப் படாமல் குறிப்பாலுணர்த்திச் சென்ற பல விஷயங்களைக்கண்டு ஆங்காங்குப் பல செய்யுள்களை இயற்றிச் சிவஞான சித்தியுடன் கூட்டினர். இவ்விதம் ஒன்று சேர்ந்த நூலே **ஞானாவரண விளக்கம்** ஆகும். ஆவரணம் - மறைப்பு என்று பொருள்படும். அதுபோலவே பரிவாரமாக வுள்ளவைகளையும் ஆவரணம் என்பர். நவாவரண பூசை, பஞ்சாவரண பூசை என்ற விடங்களில் பிரதான தேவதையைச் சூழ்ந்துள்ள பரிவார தேவதைகளுடன் பூசித்தல் என்ற பொருளில் வருவது காண்க. அதுபோலவே ஈண்டும் ஞானம் பெறுதற்கு அங்கமாகவுள்ள தத்துவ விவேகம் முதலிய பலவற்றையும் விளக்குதலின் ஞானாவரண விளக்கம் என்ற பெயர் பெற்றது.

தருமை ஆதீனம் நான்காவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடம் சந்நியாசம்பெற்று, காசிக்குச்சென்று ஸ்ரீ குமரகுருபரஸ்வாமிகளிடம் கல்வி பயின்றவரும், தருமை ஆதீனம் ஐந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ

ஞானசம்பந்ததேசிகரிடம் தீக்ஷைபெற்றவருமான வெள்ளியம்பலவாணசுவாமிகள் ஆதீன குருமுதல்வர் இயற்றிய முக்தி நிச்சயத்திற்குப் பேருரை எழுதியுள்ளார். அதுபோன்றே குருமுதல்வர் இயற்றிய ஞானவரண விளக்கத்திற்கும் ஒருரை யெழுதி ஞானவரண விளக்கத் தரும்பத விவேகம் எனப் பெய ரிட்டனர். ஆசிரியரிட்ட பெயரை நோக்கின் ஒரு சிற்றுரைபோலத் தோன்றினும் அதை வாசித்துப் பார்ப்பவர்களுக்கு அது ஒரு மாபாடியம்போல் தோன்றுதலால் வெள்ளியம்பலவாணர் மாபாடியம் என்றே பெயர்பெற்று விளங்குகிறது.

सूत्रस्थं पदमादाय वाक्यैः सूत्रानुसारिभिः ।
स्वपदानि च वर्ण्यन्ते भाष्यं भाष्यविदो विदुः ॥

என்ற பாஷ்ய லக்ஷணம் பொருந்தி யிருப்பதும் கருதத்தக்கது.

சமயங்கள் புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் என நான்கு வகைப்படும். சைவ சமயத்திற்குப் பூர்வபக்ஷமாயுள்ள மற்றச் சமயங்களை ஆராய்ந்து அவற்றிலுள்ள குற்றங்களை நன்கு வெளிப்படுத்தாத வரையில் சைவ மதத்தை எவ்வளவுதான் விரிவாக எடுத்துரைத்தாலும் கேட்ப வர்களுக்கு மேன்மேலும் ஐயம் நிகழ்ந்துகொண்டே இருக்குமாதலின் சகல மதங்களையும் ஞானவரண விளக்கத் தரும்பத விவேகத்தில் சுருக்கமாகவும் தெளிவாகவும், அவற்றிற்குரிய பிரமாணங்களைக் காட்டியும் தருக்கரீதியில் ஆசிரியர் ஆராய்கின்றனர். இப்பொழுது வெளியிடப்படும் இந்நூலில் பரபக்கத்தில் அகப்புறச்சமயம், சித்தாந்தத்தின் சங்கிரஹ ரூபமான ஞானந்தம், அளவியல் என்னும் மூன்று பாகங்கள் உள்ளன. முதற் சூத்திரம்முதல் சுபக்கம் தொடர்ந்து அச்சாகி வருகிறது.

இதன் முதற்பகுதியில் அகப்புறச் சமயமாயுள்ள வாமம், வைரவம், தக்ஷிணம் என்ற மூன்று மதங்களும் அம்மதங்களின் பூருவபக்ஷமாயுள்ள மதங் களும் அம்மத சித்தாந்தங்களும் உணர்த்தப்படுவதோடு உரையிற் கோடலால் கௌளமதம் முதலியனவும் கூறப்படுகின்றன. தக்ஷிண சைவ சித்தாந்தத்தை அனுசரிக்கும் வீரசைவமும் அதன் பிரமாணமாகவுள்ள நவலிங்க லீலை முதலி யனவும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. பிறகு அகச் சமயமும் அதன் மறுப்பும் இடம் பெறுகின்றன. அகச் சமயங்களுள் காளாமுகம் (இதை சோம சைவம் என்பாரும் உளர்) காபாலம், தாந்திரிக பாசுபதம், வைதிக பாசுபதம் மகாவிரதி என்ற சுவதந்திரபேதமாயுள்ள மதங்களும் அவற்றின் மறுப்பும் இடம் பெற்றுள்ளன. சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம்,

சரியையில் ஞானம் என்ற நான்கு பாகுபாடுகொண்ட தாதமார்க்கம், இம்மாதிரியே பாகுபாடுடைய புத்திர மார்க்கம் முதலியனவும் கூறுப்படுகின்றன. இம் மதங்களைக் கன்மாந்தம் ஞானாந்தம் என்று இருவகையனவாக்கி, கன்மாந்தத்தையும் பதமுத்தி மதம் பரமுத்தி மதம் என இரு கூருக்கிச் சொல்லுகிறார். யோகத்தில் யோகம்வரையிலுள்ள மதம் கன்மாந்தத்தில் பதமுத்தி மதம் எனவும், யோகத்தின் ஞானம் பரமுத்தி மதம் எனவும் கூறப்படுகிறது. நிஷ்களயோக மதம், சைவ சாங்கிய மதம், பரமுத்தி வாத மதம், யோக ஞானமதம் எனினும் ஒன்றே. அது ஞானாவரண சித்தாந்தத்திற்கு அங்கமாகும். பரமுத்தி மதங்களில் ஐக்கியவாதி, பாஷாணவாதி, பேதவாதி, நான்கு வகையான சிவ சமவாதி சங்கிராந்தி வாதி, ஈசுவர அவிகாரிவாதி, பரிணாமவாதி, இலய சைவர், சிவசம வாதியான அபிவியத்தி சமவாதியின் அவாந்தர பேதமான சிவாதாதிக்கவாதி இவர்களின் மதங்களும் அவற்றின் முக்திநிலைகளும் அவற்றிற்குரிய பிரமாணங்களும் சொல்லப்படுகின்றன. இதுவரையில் முதற்பகுதி.

ஞானாந்தத்தை ஆரம்பத்திலேயே விரிவாகக் கூறின் மாணவரினிதுணரமாட்டாராதலின் அளவியலுக்கு முன்னதாக ஞானாந்தத்தை சங்கிரஹ ரூபமாகக் கூறுவது இந்நூலின் இரண்டாம் பகுதி

மூன்ரும் பகுதியில் சிவஞானசித்தியாரை ஒட்டி அளவியல் கூறப்படும். ஆயினும், முதற்கண் பிரமாண சாமான்யலக்ஷணம், விசேஷ லக்ஷணம், பிற மதத்தினர் கூறும் அளவைகளெல்லாம் சித்தாந்தத்திற்கொண்ட பிரத்யக்ஷம் அனுமானம் ஆகமம் என்ற மூன்றனுள் அடங்கும் முறை இவற்றைக்கூறி, பிரத்யக்ஷம் அனுமானம், ஆகமம் இவற்றின் விரிவான லக்ஷணம் கூறப்படுகிறது. பிறர்கூறும் அனுமானங்களைக் கண்டிக்க, ஏதுப்போலி பக்கப்போலி, திருஷ்டாந்தப்போலி முதலிய ஏத்வாபாசங்களும் நிக்கிரஹஸ்தானம் (தோல்வித்தானம்) முப்பத்திரண்டும் விரிவாக உதாரணத்துடன் விளக்கப்பட்டிருக்கின்றன.

அரும்பதவிவேகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட வடமொழியிலுள்ள ஆகமம், ஆகமப்பிரகரண நூல்கள், நியாய, வேதாந்த மீமாம்ஸா சாஸ்திர நூல்கள், பல காவியங்கள் தோத்திரங்கள், தமிழ் மொழியிலுள்ள தேவாரம், திருவாசகம் சமயசம்பந்தமான பிரகரண நூல்கள், இலக்கண நூல்கள், பரிபூரணசித்தி, தத்வாமிருதம், தத்துவப் பிரகாசம், அறிவானந்த சித்தியார், நிராமய தேவர் நூல், சத்திநிபாத அகவல் திருமந்திரம் ஆகிய பல நூல்கள் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன.

மேற் கோளாகக் காட்டிய நூல்களிலும் பாடபேதம் காணப்படின் ஆராய்ச்சியுடன் உண்மையான பாடத்தை நிலைநிறுத்தி மற்ற பாடத்தைக் கண்டிக்கும் அழகு தனிப்பட்டது. உதாரணமாக பக்கம் 53, 54, 55 இவைகளில் 'பெற்ற நல்லாகமம்'' என்ற திருமந்திரத்தை ஆராய்வது நோக்கத்தக்கது, மேலும் தந்திரம் ஒன்பது; அவற்றினின்றும் ஆகமம் இருபத்தெட்டு; (இவ்விருபத்தெட்டு காமிகாதிகளைத்தவிர மற்றொரு வகையாகவும் கூறப்பட்டது) அவற்றின் உபபேதம் உபாகமங்கள் (இவை 207, 224, 228 என மூன்றுவகையாகக் கூறப்பட்டிருக்கின்றன) எனல் ஆராய்ச்சிக்குரியது.

ஞானுவரணவிளக்கச் செய்யுள்கள் பெரும்பாலும் கிடைக்கவில்லை. அரும்பத விவேகத்தில் ஆங்காங்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டவைகளினின்றும் ஒன்று சேர்க்க வேண்டியிருக்கின்றன. இவ்வாறு சேர்த்துக் காட்டப்பட்டவைகளே 73, 81, 119, 121, 205, 206, 207, 217, 218, 219, 220, 221 முதலிய செய்யுள்கள்.

மூலப்பிரதியில் ஆங்காங்கு செல்லரித்தமையால் புள்ளியிடப்பட்ட பாகங்கள் அப்படியே அச்சிடப் பட்டிருக்கின்றன. நூல் மிகப் பெரியதாக இருப்பதாலும், எழுத்துக்களை உபயோகிப்பதில் தமிழ் ஸம்ஸ்கிருதம் என்று வேற்றுமையின்றித் தமிழ்ச் செய்யுட்களை ஸம்ஸ்கிருத எழுத்துக்களிலும் ஸம்ஸ்கிருத சுலோகங்களை தமிழ் எழுத்துக்களிலும் மாறி மாறி எழுதியிருப்பதாலும், விஷயங்களில் பல பிழைகள் இருக்கலாம். அச்சிடப்பட்ட பிறகு திருத்தப்படவேண்டியவை எனத்தோன்றின. மூலத்திற்கு பழுது உண்டாகாமல் இருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கம் கொண்டு அச்சிடப்படுகிறது. மேற்கோளாகக் காட்டப்பட்ட நூல்கள் பல கிடைக்கவில்லை. அவைகளும் பல இடங்களிலிருந்து கையெழுத்துப் பிரதிகளாகவும், ஏடுகளாகவும் சேகரிக்கப் படுகின்றன. இவைகள் மேல் ஆராய்ச்சிக்கும், நூலின் முடிவில் பிழை திருத்தம் முதலியன காண்பிக்கவும், மறு பதிப்பில் நல்ல முறையில் வெளியிடவும் பயன் படும்.

இந்த அரிய ஞானுவரணவிளக்கத்தை அரும்பத விவேகத்துடன் ஆராயவும், ஆராய்ந்து அச்சிற் பதிப்பிக்கவும், தமிழுலகுக்கும் சைவ உலகுக்கும் புதியனவான செய்திகள் பலவற்றை அறிவதற்கும் அறிவிப்பதற்கும் எனக்கும் வாய்ப்புத் திருவருளால் கிடைத்தது. இதனை நினைக்கும்போது கரும்புதின்னக் கூலி போல என்ற பழமொழி நினைவில் எழும். தாமின் புறுதல் உலகின் புறுதல் என்ற வண்ணம் எனக்கும் அளித்த இப்பெரும் பணியைத் திருவருளே துணை

யாகக்கொண்டு அவனருளே கண்ணாகக்கொண்டு ஆராயக் கூடிய வாய்ப்பை அளித்த தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்களுக்குப் பணிவுடன் கூடிய நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப்பணி யருளப்பெற்றவரும், எனக்கு உறுதுணையாயிருந்து உதவியும், தாமும் ஆராய்ந்தும், ஆராயுங்கால் என்னையும் கலந்து அளவளாவியும், ஆராய்ச்சிக் குறிப்புக்களால் பதிப்பை அழகுபடுத்தியும் உதவியவரும் ஆகிய இவ்வாதீனப் புலவர், ஆதீனக் கல்லூரிப் பிரின்ஸ்பால், சித்தாந்த ரத்நாகரம் சித்தாந்த சிரோமணி, முதுபெரும் புலவர், மதுரகவி முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்களுக்கு எனது நன்றி.

வாழ்க சைவ நீதி! வழங்குக வையமெல்லாம்!!

இங்ஙனம்
K. இராசகோபால சாஸ்திரி
வடமொழிப் பேராசிரியர், ஓரியண்டல் காலேஜ், தருமபுரம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

அணிந்துரை

குருஞானசம்பந்தர் வணக்கம்

இருமையிரு வினைப்பயனற் றொருமையருள் வாழ்வளித்துள் இன்ப வீடு
தருமையிரு காரியமும் பதிருறு கலையபிரா சாத யோகும்
அருமையிரும் பூசையுடன் பெரும்பொருள்வார்த் தையும்நல்கும் ஆசான் எங்கள்
தருமையிருந் தோளிர் முதன்மைக் குருஞான சம்பந்த சாமி போற்றி.

வெள்ளியம்பலவாணர் வணக்கம்

கள்ளி யம்பல களிசெயும் பொருளென வுலகைத்
தள்ளி யம்பலத் தாடுமோர் தனிமுதல் கழலே
யுள்ளி யம்பல நிறைந்தநூல் களையுவந் துதவும்
வெள்ளி யம்பல வாணனைத் தொழினறும் வினையே.

குருசந்நானம்

'சைவசித்தாந்தம் நாடெங்கும் பரவி விளங்கியிருந்த காலத்தில் தென் மொழி வடமொழி பலவற்றிலும் நூல்கள் தோன்றின. தென்மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கிலும் சைவசித்தாந்த நூல்கள் உள்ளன. தாம் பேசும் மொழியில் தம் சமயத்துண்மைகளை எழுதுவது சமயப் புலவர்க்கு இயல்புதானே! அங்கனம் தமிழ்ப் புலமையும் சிவநெறி யொழுக்கமும் திருவருளுபதேசமும் வாய்ந்து விளங்கியவர்கள், தமிழிலே செய்த சைவசித்தாந்த நூல்கள் பற்பல உள்ளன. அவற்றின் பொருள் திருக்கைலாயத்திலிருந்து குருபரம்பரையில் வந்ததாகும். அப்பொருளின் விளக்கமே குருபரம்பரையினால் நம்மனோர்க்கு எய்துவதாகும். அத் திருக்கைலாய பரம்பரைக் குருசந்தானத்தின் பல கிளைகளுள்ளே தருமையாதீன குருசந்தானம் ஒன்று. இதற்கு முதல்வ ராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், 'ஞானாவரண விளக்கம்' என்னும் இந்நூலை அருளினார்கள். அவர்களால் நூல் மரபு, உபதேச மரபு ஆகிய இரண்டும் இத்தருமை யாதீனத்து வழக்கில் இருந்து வருகின்றன.

ஞானுவரண விளக்கம்

'மெய்கண்ட நூல்கள்' எனப் புகழ்ந்து போற்ற விளங்கும் தமிழ்ச் சாத்திரங்களுள்ளே மெய்கண்ட தேவ நாயனுர் அருளிய சிவஞான போதமே முதல் நூல் அதன் வழி நூலாயும் செய்யுள் உருவிலான உரைநூலாயும் திகழ்வது அருணந்திதேவ நாயனுர் அருளிய 'சிவஞான சித்தியார்'. அது பரபக்கம் சுபக்கம் என்று இருதிறத்ததாகும். அவ்விருதிறத்தினையும் விரித் துரைக்கும் பேருவிளக்கமாகத் தருமைக் குருமுதல்வர் குருஞான சம்பந்தர் 'ஞானுவரண விளக்கம்' என்னும் இதனை அருளினுர்கள். ஞானம் - சிவஞானம். ஆவரணம் - சூழல்; (மறைப்பு). ஞானுவரணம் - சிவஞானச் சூழ்நிலை. அச்சூழ் நிலையை விளக்குவது ஞானுவரணவிளக்கம். ஞானத்தாற் சூழப்பெற்ற நிலையே ஞானுவரணம் ஆகும்.

நூலமைப்பு

'ஞானுவரண விளக்கம்' சிவஞான சித்தியார்க்கு விளக்கம் ஆயினும், அதனைப்போன்று வேறு தனி நூலன்று. அச்சிவஞான சித்தியாரைத் தன்னகத்துக் கொண்டு அமைந்ததோரு நூலாகும். ஞானுவரண விளக்கச் செய்யுட்கள் அனைத்தும் விருத்தப்பாக்கள் என்பது பெரும்பாலான பகுதியால் அறியப்படுகின்றது. அவை யெல்லாம் முழுவுருவிற் கிடைக்கப் பேறல்வேண்டும். பேருரைகொண்டு சில பாக்களின் உருவம் அறியலாயிற்று. இது வடமொழி யிலும் இருக்கின்றது.

பரபக்கமும் சுபக்கமும்

புறப்புறம், புறம், அகப்புறம், அகம் எனச் சமயம் நால்வகைப்படும். அவற்றின் கொள்கையும் மறுப்பும் 'பரபக்கம்' என்பதில் அடங்கும். அந் நால்வகையும் கடந்த தனிமுதற் சமயமே சுத்தாத்துவித சைவசித்தாந்தம். அதன் விளக்கமே சுபக்கம். பரபக்ஷம் - பிறசமயக் கோட்பாடு. சுவபக்ஷம் - சைவ சித்தாந்தக் கோட்பாடு. சுபக்கத்திலே அகச் சமயங்களின் கோட்பாடுகளிற் சிற்சில, சைவசித்தாந்த நோக்கத்திலே, சுபக்கத்திலும் கூறப்படும். அறுவகைச் சமயங்களையும் பூருவபக்கம் செய்து நாட்டிய சித்தாந்தமே சிவஞானசித்தியாரது முடிபாகும்.

கன்மாந்தமும் ஞானுந்தமும்

'சைவசித்தாந்தம்' என்னுந் தோடரிலுள்ள சைவம் என்பது 'சுத்தசைவம்' என்னும் சௌமிய சைவத்தைக் குறிப்பது. அசுத்த சைவம் ஆகிய பாசுபதம் முதலியவற்றை நோக்கிச் 'சுத்த சைவம்' எனப்பட்டது. (பக்கம். 3. பார்க்க)

அச் சௌமிய சைவத்துக்குப் பூருவபாகம் ஆன 'கன்மாந்தம்' பூருவபட்சம் ஆகும். சௌமிய சைவத்தின் முடிபாகிய 'ஞானந்தம்' சித்தாந்தம் ஆகும். இதுவே சைவசித்தாந்தம். இந்நூலின் 363 ஆவது பக்கம் வரையிலே கன்மாந்தமும் அதன்பின் ஞானந்தமும் கூறப்பட்டன. இம் மாபாடியத்தில் அகத்தில் அகப்புறச் சமயம் முதலாக உள்ள பகுதியே இப்போது கிடைத் திருக்கின்றது.

மாபாடியம்

'நூல்' சுருங்கச்சொல்லி விளங்க வுணர்விக்குங் கருவி. 'உரை' அச்சொற் சுருக்கத்தின் அமைந்த பொருட்பெருக்கத்தை உணர விளக்குவது. 'நூல்' முதலும், வழியும், புடையும் ஆகவும் அவ்வழி தொகையும், வகையும், விரியும், மொழிபெயர்ப்பும் ஆகவும் பலவகைப்படும். அவற்றுள் இது விரியின் பாற்படும். உரையும் அருஞ்சொற்பொருட்குறிப்பு, கருத்துரை, பொழிப்புரை, சொற்பொருள், விரித்துரை, சிற்றுரை, பேருரை நுட்பம், எச்சம் முதலியன ஆகப் பலவகைப்படும். நூலின் சொற்சுருக்கத்தால், நூலாசிரியரது அகத்தைத் தேர்ந்துணர்ந்து, பொருட் பெருக்கத்தை நல்கும் பேராற்றல் உடையவரே உரையாசிரியர் ஆவர். நூலாசிரியர் செய்யும் உதவி பேருணர்வினர்க்கே பயன் படும். உரையாசிரியர் செய்யும் உதவி அப் பேருணர்வினராக அவாவும் சிற்றுணர்வினர்க் கெல்லாம் பயன் படும். அவ்வாறு செய்யுந் திறத்தில் உரை யாசிரியர் மிக்க ஆற்றல் வாய்ந்தவராயிருத்தல் வேண்டும். இம் மாபாடியம் அதன் இலக்கணத்திற்குரிய நெறியில் அமைந்துள்ளது. பாடியத்தின் இலக் கணம் ஆவது:-

சூத்திரத்திலுள்ள பதங்களைக் கொண்டு சூத்திரங்களை யொத்த வாக்கியங் களால், சூத்திரத்திலுள்ள பொருள்களையும், பதங்களையும் விரித்தெழுதுதல் பாடியம் எனப்படும்.

இந் நூலாசிரியர் உரையாசிரியர் இருவர் பெருமைகளையும் பின்னர் உள்ள அவர்தம் வரலாற்றில் அறிந்துகோள்ளலாம்.

அரும்பத விவேகம்

'அரும்பத விவேகம்' என்பது இம் மாபாடியத்தைக் குறிக்கின்றது. இந்நூலின் தொடக்கத்தில் உள்ள.

'' மலைமகள் கொழுநன் மைந்தர்நம் குரவர்
கலைமகள் சேவடி கருதும் பரம்என
வருந்தமிழ் ஞானு வரண விளக்கத்து
அரும்பத விவேகம் ஆம்உரை செயற்கே ''

என்று நுதலிப் புகுதலை யுணர்த்தும் பாட்டால் அதனை அறியலாம். அரும் பதம்-அரியசொல். அரும்பதப்பொருள் - அரிய சொற்களின் பொருள். இஃது 'அரும்பத விவேகம்' ஆதலின், குறிப்புரை அன்று. பாடியம் என்பதன் பொருளே அது. இம் மாபாடியத்தை நன்கு நோக்கின், 'அரும்பதவிவேகம்' என்றதன் பொருத்தம் இனிது புலப்படும். படவே இத்திறத்திலும் உரையாசிரியரது செயலும் சொல்லும் கருத்தும் ஒத்திருத்தல் விளங்கிற்று.

பேருரைச் சிறப்பு

இதன் ஆசிரியர் வெள்ளியம்பலவாணர். தென்பாற் குமரிமுதல் வடபால் இமயம்வரை சென்று கண்டவர். திருநெல்வேலி, காசி முதலிய பல இடங்களில் வாழ்ந்தவர். காசியில் வாழ்ந்த காலங்களில், வடமொழியில் உள்ள எண்ணற்ற சித்தாந்த நூல்களைக் கற்றுணர்ந்தவர். இருமொழியிலும் அளவில் அடங்காத சித்தாந்த சாத்திரங்களை யுணர்ந்த பெருமை இவர்காலத்தில் இந் நாட்டில் இம் முனிவர் பிரானுக்கே உரியதாகும். ஆகவே இப் பேருரை மணி மிடை பவளம் போல வடமொழிமிடை தமிழ்வடிவில் விளங்குகிறது. இதில் உள்ள மேற்கோள் நூல்களின் பெயர்களெல்லாம் இந்நாட்டினர்க்குப் புதியன வாயுள்ளன. இம்முனிவரது சாத்திர ஞானக்கடலின் பேராழத்தைக் காட்டுவன வாகப் பல உள்ளன. அவற்றுள் ஒன்றுன முத்திநிச்சயப் பேருரை முன்னரே வெளியாகி, உலகம்போற்றும் பெருமைக்குரியதாய் உலவுகின்றது. வெள்ளியம்பலவாணர் சிவஞானனந்த சொரூபர். அவர் செய்த பேருரை அச் சொரூபத்தின் தடத்த ரூபம் ஆகும். ஆகவே இஞ் ஞானுவரண விளக்கமாபாடியம் ஆகிய தடத்த ரூபத்தை உணர்ந்தவர், சிவ சொரூபம் எளிதின் எய்துவர் என்பது திண்ணம்.

மாபாடியப் பதிப்பு

நெடுங்காலமாகச் சைவப் பெருமக்களால் மிக்க ஆர்வத்தோடும் எதிர் பார்த்து நிற்கின்ற சிவஞானக் களஞ்சியமான இம் மாபாடியத்தை வெளியிடத் திருவுளங் கொண்டவர்கள் தருமையாதீனத்தின் 23ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் ஆவார்கள். அவர்கள் அருளாணையால் ஆக்கிய கையெழுத்துப் பிரதியில் இடையிடையே சிற்சில பகுதிகள் கிடைக்காமல் விடப்பட்டுள்ளன,

உள்ள அளவேனும் உலகர்க்குப் பயன் நல்கற் பொருட்டு 'ஞானசம்பந்தம்' என்னும் தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீட்டிலே சிற்சில பக்கம் வெளியிடப் பட்டுவந்தது. பின் தனி நூலாகவே வெளியிடத் திருவுளங்கொண்ட 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அடியேனையும் தருமை யாதீனப் பல்கலைக் கல்லூரி வடமொழிப் பேராசிரியராகிய சிரோமணி, ஸ்ரீ கே. இராசகோபால சாஸ்திரி அவர் களையும் செவ்விதின் ஆராய்ந்து வெளியிடும் வண்ணம் பணித்தருளினார்கள். அக்கட்டளையைப் போற்றிப்புனைந்து ஒல்லும் வகையில் ஆராய்ந்து வருகின்றோம். நூலும் அச்சிடப்பெற்று வருகின்றது. இப்பொழுது நிகழ்ந்த அளவினும் இன்னும் அச்சாகத்தக்கபகுதி மிகுதியாயுளது எனினும், பரபக்கமும், ஞானந்த சங்கிரகமும், அளவியலும் ஆகிய மூன்றையும் ஒரு பகுதியாக்கி வெளியிடுவது சைவருலகம் எளிதிற் கையாள்வதற்கும். இதனைப்பற்றிய எண்ணங்களை வெளியிடுவதற்கும் ஏற்றதாகும் என்று திருவுளத்தெண்ணிய எங்கள் குரு முதல்வர் அருளாணையின் வண்ணம் இவ்வளவில் இது வெளியிடலாயிற்று. இதனினும் திருந்திய முறையில் இது வரற்பாலதாயினும், முதல் முயற்சியில் இத்துணைச் சிறப்பில் வெளிவரும் பெருநலத்தைக் கருதி உலகம் ஏற்றுப் பயன் எய்தும் என்று எண்ணுகின்றேன். இத்தகைய ஞானபுத்தகதானம் ஆகத் தமது அருட் கொடையைச் செய்துவரும் குருமணியை நீடூழி வாழ்க! வாழ்க! வாழ்க!!! என்று வாழ்த்துவதே நமக்கு உற்ற கடமையும் கைம்மாறும் ஆகும். வாழ்க குருமரபு! வளர்க சிவஞானம்!

தருமபுரம்
29—8—57

அடியார்க்கு அடியன்.

முத்து. சு. மாணிக்கவாசகன்,

பிரின்சிபால், ஆதீனப் பல்கலைக்கல்லூரி.

குருபாதம்

தருமை ஆதீன குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பாண்டியநாடு, சீவில்லிபுத்தூர், கார்காத்தார் (சைவவேளாளர்) மரபு. தந்தையார் சுப்பிரமணியப் பிள்ளை. தாயார் மீனுட்சி அம்மையார். திங்கட் கிழமையில் தோற்றம். பிள்ளைத் திருப்பெயர் 'ஞானசம்பந்தன்'. கல்வியில் இளம்பூரணர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சோக்கலிங்கத்தை வழிபட மதுரைத் திருவாலவாய்க்குப் பிள்ளையோடு போந்தனர் திரும்பும் நாளில், 'அம்மையப்பர் ஆலவாயானும் அங்கயற்கண்ணியுமே. உடம்பிற்குத் தாய் தந்தையான உம்மோடு வாரேன்' என்று மறுத்து, அவரை உளங்கோளச் சோல்லி விடுத்தார் மேய்யுணர் பிள்ளையார்.

நாள்தோறும் போற்ருமரை முழுக்கு, வேளைதோறும் திருக்கோயில் வழிபாடு. ஒருநாள் அக்குளக் கரையில் அடியவர் புரியும் சிவபூஜையில் அழுந்திற்று அவர் உள்ளம்.

" தாவரிய அன்பினுல் சம்புவினை எவ்விடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும் படிகண்டால் இனிதுவந்து
பாவனையால் நோக்கினுல் பலர்காணப் பயன்பெறுவார்
மேவரிய அன்பினுல் மேலவர்க்கும் மேலானுர். "

(சேக்கிழார் சுவாமிகள்)

இது போய்யாமோழி. ஞானசம்பந்தர் சோக்கலிங்கத்தை வேண்டினுர். இரவில் கனவில் அருளியவாறே, போற்ருமரையின் வடகீழ் மூலையில், பேட்டகத்தோடும் அட்டமூர்த்தியைப் பேற்று, நட்டம் ஆடினுர். இட்டமாப் பூசிக்க எண்ணுவரோ? சிவாகம விதிப்படி வழிபட விரும்பினுர். அது குறித்து ஆண்டவனை வேண்டினுர். கால்மாறினுன் அதற்குப் பால்மாறுவனே? திருவாரூரில் ஞானப்பிரகாச முனிவரிடம் உபதேசமும் பூஜையும் ஏற்கப் பணித்தருளினுன். இருவர் கனவிலும் அதற்கேற்ற அருள் நிகழ்ந்தது.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தேன்முகக்கடவுள் திருமுன், பக்குவ சீடரை அருட்குரு எதிர்நோக்கியிருந்தார். அங்குச் சேர்ந்த பிள்ளையார் காந்தம்

கண்ட இரும்பே போல விரைந்துற்ருர். அபயம் பெற்ருர். சிவதீக்ஷையும் சிவ பூஜையும் எய்திஞர். நாள்தோறும் சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. குரு தோத்திரமே ஞானப்ரகாச மாலை. அநுபவத்திற் கண்டதே 'சிவபோகசாரம்'.

ஒருநாள் பூங்கோயிலில் வழிபாடு; மடத்து வெளியே குருநாதர் 'நிற்க' என்று பணித்தருளிஞர். குருவாணை கடவாதவர் ஆதலின் கைவிளக்கோடு நின்ருர். அசைந்தா ரல்லர். மழையோ அவரைச் சுற்றி முன்றடிக்கு அப்பாலேயே பெய்தது. குருபத்தினியார்க்கு விடியலில் அவ்வுண்மை தெரிந்தது. குருவும் அதுகேட்டுச் சென்று நோக்கி, உள்ளுருகி, விழிநீர் பெருகி, அணுகித் தழுவி, 'யாம் வணங்கும் கடவுள்' வேறுண்டோ என்று மொழிந்து, அதிதீவிர பக்குவியான உமக்கு. இனி இங்கு யாது உண்டு? நினைத்த இடத்தில் சென்று, உபதேசம் புரிந்து, சமய பரிபாலனம் செய்க என்ருர். உவப்பத் தலைக்கூடியவர், உள்ளப் பிரியும் நிலையினரே ஆயினும்,

"கனக்கும் போதிக்கும் எருதுக்கும் தன்இச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார் புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்று
உனக்கு இச்சை எப்படி? அப்படி ஆக உரைத்தருளே."

என்று வேண்டிஞர். தருமபுரத்திற்குச் செல்க எனப் பணித்தருளிஞர் கமலை முனிவர்.

குருவாணைப்படி தருமபுரத்தை அடைந்தார். சைவ சமய பரிபாலனம் புரிந்து வந்தார். ஞான நூல்கள் பல அருளிஞர். அவற்றுள் சிவபோகசாரம், முத்தி நிச்சயம், ஞாளுவரண விளக்கம் முதலியன உலகம் புகழும் உத்தம நூல்கள். ஆநந்தபரவசர் முதலிய பலரை இச் சிவ ஞான வுபதேச பரம்பரையில் நிலவச் செய்தருளிஞர் இக் குருமுதல்வர். வாழ்க குருஞானசம்பந்தர் மலரடிகள்.

குருபாதம்

ஸ்ரீமத். வெள்ளியம்பலவாண சுவாமிகள்

இவர்கள் நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளிடத்தில் சிவதீக்கையும் சைவ சந்நியாசமும் பெற்றவர்கள். படிக்காசு வைத்த முனிவருடன் காசியாத்திரை சென்று ஆங்கு ஸ்ரீ குமரகுருபர சுவாமி களிடம் வடமொழி தென்மொழி இரண்டையும் கற்று வல்லவரானார்கள். ஐந்தாவது குருமூர்த்திகளாகிய ஞானசம்பந்த தேசிக சுவாமிகளிடத்தில் ஞான தீக்கை பெற்று அவர்கள் திருமுன் ஞானசாத்திரங்களையும், பண்டாரசாத்திரங் நன்கு கற்றுத் தெளிந்தவர்கள்.

இவர்கள் புள்ளிருக்குவேளூர் முதலான இடங்களில் சிவாலயத் திருப்பணி புரிந்து, திருவெண்காட்டில் நடராஜப்பெருமானுக்குத் திருச்சபையும் அமைத் துள்ளார்கள். இம் முனிவர் பெருமான் தக்ஷிணயாத்திரை செய்யும்பொழுது, திருச் செந்தூரிலே முருகக் கடவுளைத் தரிசித்து, ஆங்குள்ள அடியார்கள் வேண்டு கோளின்படி சண்முக விலாசத்திற் பிரசங்கஞ்செய்துகொண்டிருந்தனர். அத் தருணத்திலே வித்தியாகருவங் கொண்டிருந்த புலவர் ஒருவர், சுவாமிகளின் கல்விப் பெருக்கைக் கண்டு பொறாமையுற்று வீண்வாதஞ்செய்து தூற்றலானார். அப்பொழுது முனிவர், அப்புலவரை நோக்கி, நாம் உன்னிடத்தில் நேரில் நின்று வாதஞ்செய்வதற்கு நீ அருகனல்லை. ஆதலால், எமது மாணாக்கனால் வெற்றி கொள்வேம் எனக்கூறிப் பிரசங்கத்தைச் சிறப்பாகச் செய்துமுடித்தார்கள். பின் திருநெல்வேலியினை யடைந்து, பொருநைநதி தீரத்திலுள்ள சிந்துபூந்துறையில் தம் ஆதீனத்துக்குச் சொந்தமான மடாலயத்தில் எழுந்தருளியிருந்தார்கள். மாணாக்கர் பலர்க்கும் இலக்கண இலக்கியங்களைப் போதித்துவந்தார்கள்.

அக்காலத்திலே, துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர், பேரிலக்கணங் களைக் கற்க விரும்பித் தம் சகோதரர்களாகிய வேலையர் கருணைப்பிரகாசர் என்னும் இருவரோடும் தக்ஷிணத்தை நாடிச்செல்லும்பொழுது, வடமொழியிலும் தென்மொழியிலும் மிக வல்லவராகிய வெள்ளியம்பலவாண முனிவரர் சிந்து பூந்துறையில் இருக்கின்றார்களெனக் கேள்வியுற்று, ஆங்கடைந்து முனிவரரைத் தரிசித்து வணங்கித் தமது கருத்தைத் தெரிவித்துக்கொண்டனர். முனிவரர், சிவப்பிரகாசருடைய இலக்கியப் பயிற்சியை அறிதற்பொருட்டு, ‘கு எனத் தொடங்கி ‘ ஊருடையான் ’ என்பதை இடையிற்பெய்து ‘ கு ’ என்றதே ஈற்றிலும் முடியும்படி ஒரு வெண்பாப் பாடுகவென்று கூறச் சிவப்பிரகாசர்,

" குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல்
ஊருடையா னென்னு முலகு ".

என்னும் வெண்பாவை இயற்றினர். இவ்வெண்பாவில் வடக்கோடு தேருடையான் என்று அமைத்தமையை முனிவர் வியந்து பாராட்டி, அவருக்கும் அவர் சகோதரர் களுக்கும் ஐந்திலக்கணங்களையுங் கற்பித்தருளினர். சிவப்பிரகாசர், துறை மங்கலம் அண்ணாமலை ரெட்டியார் தமக்கு வழிச்செலவிற்காக உபகரித்த முந்நூறு பொன்னையும் குருதக்ஷிணையாக வைத்துவணங்க, முனிவர் "இப் பொருள் நமக்கு வேண்டுவதில்லை; திருச்செந்தூரிலே நம்மிடம் வீண்வாதஞ்செய்து நம்மைத் தூற்றும் புலவனை நீ வெற்றிகொண்டு, அவன் வந்து நம்மை வணங்கும் வண்ணம் செய்தலே குருதக்ஷிணையாகும் " என்று மறுத்தருளினர்.

உடனே, சிவப்பிரகாசர் ஆசிரியரை வணங்கி அனுமதி பெற்றுக்கொண்டு, ஆங்குள்ள மாணாக்கர் சிலருடன் திருச்செந்தூரிற் சென்று முருகக் கடவுளைத் தரிசித்து வணங்கிப் பிரதக்ஷிணம் வரும்போழுது முனிவராற் சுட்டப்பட்ட தமிழ்ப்புலவர் எதிர்ப்பட்டார். அவரை நிரோட்டக யமக வந்தாதி பாடி வென்று கொணர்ந்து சிந்துபூந்துறையிலுள்ள தம் போதகாசிரியராகிய முனிவருக்கு அடிமையாக்கி வணங்கினர். முனிவர் திருவுள மிகமகிழ்ந்து, சிவப்பிரகாசரை நோக்கி, நீ முதலில் இயற்றிய செய்யுளில் வியந்து கூறிய சிதம்பரத்தில் சிலநாள் வாசஞ்செய்கவென விடைகொடுத்தனுப்பினர்.


முனிவர் தம் ஆதீனத்துப் பிரதமாசாரியராகிய ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் திருவாய்மலர்ந்தருளிய முத்திநிச்சயம் என்னும் சிவஞான சாத்திரத்திற்கு ஒரு பேருரையும், மெய்கண்டசாத்திரம் பதினன்கினுள் ஒன்ருகிய சிவஞானசித்தியார்க் குரிய ஞானவரணவிளக்கம் என்னும் செய்யுள் வடிவாகிய அருள் நூலுக்கு அரும்பத விவேகம் என்னும் ஒரு பேருரையும், மிருகேந்திர ஆகம மொழி பெயர்ப்பும், ஞானசம்பந்த தேசிகர்மீது சமுகமாலை, தாலாட்டு, திருப்பள்ளி யெழுச்சி என்னும் தோத்திர நூல்களும் பிறவும் இயற்றியருளினர்கள்.

இங்ஙனங் கூறிப்போந்த வெள்ளியம்பலவாண முனிவரர் சிவபத்தி மிகுதி யால் சிவதல யாத்திரை செய்யும்போழுது, ஆங்காங்குள்ள அடியார்கள் வேண்டுகோளின்படி பல புராணப் பொருள்களையும் பிரசங்கஞ் செய்துவந்தார்கள். முனிவரர் இவ்வாறு சிவதலங்கள்தோறுஞ் சென்று யாத்திரை செய்து முடிந்த பின், விராட்புருடனுக்கு இருதய ஸ்தானமாகிய சிதம்பரஞ் சார்ந்து, நெடுநாள் ஞானநிட்டை கூடியிருந்து, ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய குஞ்சிதபாதத்தின் நீழலில் கலந்தருளினர்கள். அங்கு இவர்கள் சமாதி ஞானப்பிரகாசர் குளத்துத் தென்மேற்கு மூலையில் இலங்குகிறது. கந்தபுராணச் சுருக்க ஆசிரியராகிய சம்பந்தசரணலயசுவாமிகள் இவர்களுடைய மாணாக்கர்களுள் ஒருவராவார்கள். வாழ்க வெள்ளியம்பலவாணர் மலரடிகள்,

சிவமயம்

ஞானவரண விளக்கத்து அரும்பத விவேகத்திலுள்ள

விஷய அட்டவணை



தருமபுர ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை
தருமபுர ஆதீனத்தின் ஆதிகுருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
அருளிய

ஞானவரண விளக்கமும்

வெள்ளியம்பலவாணர் மாபாடியமும்

காப்பு

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றருமொருவா ரணத்தின் றாள்கள்
உருகோட்டன் போடும்வணங்கி யோவாதே யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமோன் றேவேன்னச் செய்யுந் தேவே.

ஆரண முதலா வனைத்துமைந் தொழிற்குங்
காரண மெனுமொரு கடவுளை
வாரண முகனை வணங்குது மகிழ்ந்தே.

மலைமகள் கொழுநன் மைந்தர்நங் குரவர்
கலைமகள் சேவடி கருதுதுந்
தலைமைசா லறிவு தலைப்படல் குறித்தே.

மாபாடியம்

அகத்தில் அகப்புறச் சமயம்.

ஆலம்வித் தென்ன வைச்ச தச்சிவ ஞான போத
மூலமா யதிலெ ழுந்த முளைச்சிவ ஞான சித்தி
மேலவாந் தளிரு மற்றும் விரிந்தனா னுந்த தீபஞ்
சாலவும் பலமு யிர்க்குத் தருமரும் பதவிவேகம்.

மலைமகள் கோமுநன் மைந்தர் நங்குரவர்
கலைமகள் சேவடி கருதுதும் பரமேன
வருந்தமிழ் ஞான வரண விளக்கத்
தரும்பத விவேக மாமுரை செயற்கே.

1 * * *

ஆசிரியர் "அகச்சமயம்" என்றது, "ஞானவரண விளக்கம்" என்னும் இந்நூலின் முன்னர்ப் புறப்புறச்சமயப் புறச்சமய சங்கற்ப நிராகரணங் கூறி இனி அகச்சமய சங்கற்ப நிராகரணம் கூறத்தொடங்கி முதற்கண் அது கூறும் இயல்புணர்த்துகின்றது.

பதப்பொருள் வெளி. ஈண்டு ஆசிரியர் என்றது அருணந்திதேவர் என்னும் அடிகளின், இனிச் "சிறிது சொல்வாம்" என்றது ஒரோவழி ஆகமமும் மற்றுஞ் சிறிது கண்டதுபற்றி.

2 * * *

"பொய்மையர்" என்பது அகச்சமயம் இருவகைப்படும் என்பதும், அவை கொண்ட வளவும், பொருளும் ஒத்தியலுமென்பதுங் கூறுகின்றது. ஈண்டுப் பர அபர சர்வாங்க பிரதிபாதகமான ஞானவரண சித்தாந்தத்திற்குச் சைவாதி அகச் சமயங்கள் பெரும்பான்மையும் ஒத்தியலுமெனவே புறச்சமய மவ்வாறுேத்தியலா வெனவருதலின் அகச்சமயம் சூட்சுமார்த்த பிரதிபாதகம் எனவும், புறச்சமயம் ஸ்தூலார்த்த பிரதிபாதகம் எனவும் பெறப்பட்டது. அது யோகஜத்தில்,

स्थूलं च सूक्ष्मकं चैव समयं द्विविधं भवेत् ।
स्थूलं बाह्यमिति प्रोक्तं सूक्ष्ममाभ्यन्तरं स्मृतम् ॥

என வருமாற்றான் உணர்க. அவற்றின்பேதம் சங்கிரகமாக ஸ்ரீமத் அசிதாக மத்தில்,

लोकायतोऽथ बौद्धश्चार्हतो मीमांस एव च ।
मायावादः पाञ्चरात्रं षडेते समया बहिः ॥

எனவும்,

शैवं पाशुपतं वामं भैरवं तु महाव्रतम् ।
कालामुखमिति ख्यातमन्तः समयषट्ककम् ॥

எனவும் வருமாற்றுன் உணர்க. ஈண்டுச் சைவம் என்றது சுத்த சைவம் என்னும் சௌமிய சைவத்தை; பாசுபதாதிகள் அசுத்த சைவம் என்னும் ரௌத்திர மாகலின். அது ஸ்ரீமத் சுப்பிரபேதத்தில்,

तदेवं सौम्यमाख्यातं, तन्त्रं पाशुपतादिकम् ।

என வருமாற்றுன் உணர்க. ஈண்டுக் காமிகாதி மூலமான சௌமிய சைவத்தைச் சித்தாந்தமென்றலின், பூர்வபக்கமாக எண்ணப்படும் அறுவகைச் சமயத்து ளொன்றுமோ எனின், வேதத்திற்குப் பூர்வமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை இருப்பன போலச் சௌமியசைவத்துக்கும் பூர்வபாகமான கர்மாந்தசைவம் என்பது பூர்வ பக்ஷமாயும் சௌமிய சைவாந்தமான "ஞானந்தம்" என்றது சித்தாந்தமாயும் கூறுதலின் அவ்வாறு ஆம் என்க.

அன்றி, காளாமுக பேதமான காபாலத்தைப் பிரித்தோதி ரௌத்திரசைவம் அறுவகைத்தாக்கிச் சௌமியசைவமான காமிகாதிகள் சித்தாந்தமெனக் கூறினுமாம். அசிந்திய விசுவசாதாக்கியத்தில்,

वामं तु त्रिविधं प्रोक्तमनादिः पूर्वपश्चिमम् ।
चतुर्विधं दक्षिणं स्यान्महाव्रतमतः परम् ॥
कालमुखं च कापालं तद्वत्पाशुपतं भवेत् ।
शैवं चतुर्विधं प्रोक्तं सिद्धान्तं द्विविधं भवेत् ॥

எனவும், சுப்பிரபேதத்தில்,

शैवं पाशुपतं सोमं लाकुलं तु चतुर्विधम् ।
तेषु शैवं परं सौम्यं रौद्रं पाशुपतादिकम् ॥

எனவும் பிறிதோராற்றுற் கூறிய வழியும் சௌமியம் பரம சித்தாந்தமென வந்த வாறு காண்க. பிறவும் விரித்துக்கோள்க.

3 * * *

"அகப்புறந்தா னிருவிதமாம்" என்பது அகப்புறம் படும் பாகுபாடு கூறு முகத்தான் மேற் காணபத்திய கௌமார மதங் கூறுதற்குத் தோற்றுவாய் செய்கின்றது. ஈண்டு, 'அகப்புறந்தா னிருவிதமாம் வாமஞ்சாம் பவமு மங்கியலுந் தக்கிணமு மதுபோ லாகும்' என்புழித் தக்கிணமென்றது வேறொருமதமேயன்றி,

वामं हि शाम्भवं शास्त्रं भैरवं दक्षिणात्मकम् ।
मिश्रं यामलमित्युक्तं सप्तमातृप्रधानकम् ॥

எனவும்,

वामं च दक्षिणं चैव तद् द्वयोर्मिश्रकम् तथा ।

எனவும் வரும் வைரவ தந்திரமான தக்ஷிணத்தைக் கூறியதன்று. பின்னும் தக்ஷிணம் என்றது யாதோஎனின் ஈண்டு மிசிரத்தை வாம வைரவத்துள் அடக்கிச் சுத்த சைவத்தைத் தக்ஷிணமேன்றலின் மாறுபாடன்று. அது மேல் விளங்கும்.

இனி வாமாதிகளை அகப்புறச்சமயமேன்றதென்னையோவெனின் ? சௌமிய சைவாசார விரோதமான மத்ய மாமிசாதி சேவைகளாற் சுத்த சைவர்க்குட் கோள்ளவாராமையின். அது சுப்பிரபேதத்தில்,

वामं च दक्षिणं चैव तद् द्वयोर्मिश्रकं तथा ।
शैवा बाह्यार्थमाख्याताः शैवा अपि न पूजिताः ॥

எனவருமாற்றுனுணர்க. இனி "வாமநேறிபல" என்றது,

वामं तु त्रिविधं प्रोक्तमनादिः पूर्वपश्चिमम् ।

என சிந்தியவிசுவ சாதாக்கியாதிகளிற் பலபடக் கூறுதலின், ஈண்டு, 'ஒருவகை யானேன்ப' தேன்றது வாமிமதமுதற் சித்தாந்த வாமி மத மீருனவற்றை என்க. அவை மேல் விளங்கும்.

4 . . . . .

இனி, உலகர் என்பது, காணுபத்தியமதமு மறுப்புங் கூறுகின்றது. ஈண்டுலகரிடையூறு தவிர்ப்பது,

वागीशाद्याः सुमनसः सर्वार्थानामुपक्रमे ।
यं नत्वा कृतकृत्याः स्युः तं नमामि गजाननम् ॥

என்றற் ருேடக்கத்தால் உணர்க. "ஒறுத்திருவர்மனைவியரைக்கவர்தல்" என்றது அரியயன் றேவிமாரைக் கவர்ந்து தம்மிருபக்கத்தும் வைத்துக்கோடல். "பல போருளினேடு மாலை யேறிதல்" என்றது ஒரு காலத்துக் கடலையும் அங்குள்ள

பொருள்களையும் துதிக்கையாற் கவர்ந்து மீளச் சிதறுமளவில் அரி தனக்குரிய தெனத்தேடி யெடுத்துச் சக்கரங் காணுது அதுபெற விநாயகர்முன் கூத்தாடிப் பெற்றது. ''மற்றும் பரியதோர் அச்சொடிதல்'' என்றது சிவன் முப்புரமழிக்கத் தொடங்கும்போதிவர்க்குப் பிரீதி பண்ணுமையிற் றேரின் அச்சொடியச் செய்தல்.

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புர முந்தீபற. —திருவாச, உந்தி

என்றது மிதுபற்றி. பின்னர்ச் சிவன் நினைத்து,

ओङ्कारममृतं ब्रह्म शिवमक्षरमव्ययम् ।
यमामनन्ति वेदेषु तं प्रपद्ये विनायकम् ॥

என்பது முதலிய ஸ்தவராஜத்தாற் பூசித்த பின்னர் அரி விடையாகத் தாங்கலுந் தேரியல்பினின்று புரமெரித்ததெனச் சிவபுராணம் கூறுமாற்றுனுணர்க. ''தலைவ னிவனென மூலத் துறைதல்'' ஆவது,

मूलाधारे चतुष्पत्रपद्ममध्ये विनायकम् ।
गजवक्त्रं च रक्ताभं त्रिनेत्रं च महोदरम् ॥

என்றித் தொடக்கத்தன ஆகமங் கூறுதலின் அது சத்தியபிவியத்தித்தான மாகலினுண்டே சிவாபிவியத்தித் தானமுமாதல்பற்றி...............ணுகிய தலைவ னிவனென்பது கருத்து. ''தகுதி பிறவற்று'' மென்றது காணபத்திய தந்திரம் கூறும்பலவற்றுனுமென்பதற்கு.

5 * * *

''தானவரைக் கொன்று'' என்றது கௌமார மதமு மறுப்பும் கூறுகின்றது. ஈண்டு, தானவரைக் கொன்றதும் மற்றும் கந்தபுராணத்தும் பிறவற்றுங் காண்க. சதுர்முகனைச் சிறை வைத்தது பிரணவத்தின் பொருள் தெரியாமையின். அது வருமாறு:- காஞ்சிமான்மியத்தில் குமரகோட்டம் பற்றிய இயைபில் சுப்பிரமணியரைக் குறித்துப் பிரமன் கூறியது.

हृदयकमलमध्ये दीपवद्वेदसारं प्रणवमयमतर्क्यं योगिभिर्ध्यानगम्यम् ।
हरिगुरुशिवयोगं सर्वभूतस्थमेकं सकृदपि मनसा मां ध्यायते यः स मुक्तः ॥

एतावदद्य विज्ञातमाद्यस्यार्थोऽक्षरस्य च ।
मां विमोचय देवेश सुब्रह्मण्य नमोऽस्तु ते ॥

என்பது. பிறகு சிவன் கூற்று,

प्रणवस्य महार्थस्य मत्परस्य मनोरसौ ।
मत्पुत्रवाचकस्यैष श्रुतिदृष्टस्य सर्वशः ॥
ईशानः सर्वविद्यानां भूतानामहमीश्वरः ।
ब्रह्माधिपो ब्रह्मणश्च ब्रह्म सोऽहं सदाशिवोम् ॥
अथवा सर्वयज्ञेषु सुब्रह्मण्योमिति क्रिया ।
अहं च मम पुत्रश्चाप्योङ्कारार्थौ श्रुतौ श्रुतेः ॥
इममर्थं न जानाति कथमेष विधिः स्मृतः ।
विमोच्यश्च कथं त्वेष तन्मया वद कामराट् ॥
तथाप्यहं विधातारं मोचयिष्ये कृपाबलात् ।
प्राहिणोदथ नन्दीशं सुब्रह्मण्यान्तिकं शिवः ॥

என்பது. இவை முதலியவற்ருலும் முன்னர்ப் பிரமமத மறுப்பிற்காட்டிய வசனங்களானு முணர்க. *"பன்றியேனத் திருமாலான போழுதடாதது" என்றது முன்னர் வைணவமத மறுப்பில் வீரபத்திரர் நாரசிங்கத்திற் குரைத்தது.

विवृतस्कन्धदंशेन दंष्ट्रोत्पाटनपीडितम् ।
वराहविग्रहस्तेऽद्य साक्रोशस्तारकारिणा ॥

என வருமாற்ருனுணர்க.

"எங்கும் நொடியிற் சுற்றி" என்றது சிவன் கையிலுள்ள பழத்தை விநாயகரும் முருகவேளும் கேட்டவளவில் பிரமாண்டகடாஹத்தை நொடியிற் சுற்றி வந்தவனுக்குக் கொடுப்போம் என்றுழி அவ்வாறு சுற்றிவந்த வதிசயங் தோன்ற. இதன் விரிவு சிவபுராணத்திற் கண்டுகொள்க. "அம்பிகையைப் பயமாறப் போரிற் காத்தல் தேவி தண்டி முண்டி என்னுமிருவரையும் சங்கரிக்கப்

---

* பக்கம் 5 இல் 'வருமாறு' என்றதால், அவ்வருமாற்றை உணர்க என்றது.

போர்புரிகாலைச் சிறிது வருத்தந் தோன்றுழிச் சிந்தித்தவுடனே சென்று வருத்தந்தீர அவ்விருவரையுங் கொன்று தேவிக்குபகரித்தல், இதுவும் மூலபுராணம் கூறும். ஈண்டெழுதிற் பெருகும்.

“கானமருங் கொன்றை யணிவார்க்குபதேசித்தல்” என்றது முற்கூறிய வாறே பிரணவப் பொருளைச் சிவன் கேட்டவளவிற் சிவனுக்குரைத்தது. அதுவு முன்னர்ப்பிரமமத மறுப்பில் உதாகரித்த சிவரகசிய கண்டம் கூறுமாற்ரு னுணர்க. இதனுனேயன்றே அருணகிரிநாதர்,

‘முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் தருளிய’ —திருப்புகழ்.

என்றதூஉம், மற்றனைத்து மறுப்பும் வெளி. மற்றனைத்தென்றது கௌமார தந்திரம் கூறுவனவும் கொள்ள; அதிகாரமுறையான் முற்கூறிய “பிறவற்று” மென்ற தீண்டும் இயையு மென்பதனுல். இவ்வாறு அயனரியானுடைய விஷயத் திலுஞ் சிறந்த செய்கையுண்டாகலின் மற்றவற்றிற் கேட்கவேண்டாமையின், இவ்விருவருஞ் சேகத்கருத்தா ஆவரேன பரமதவாதிகள் கூறுவர். அதை ஈண்டு வைத்து மறுத்தவாறு, இவ்விரு மதத்திற்கும் உத்தேசமின்ரும் பிறவேனின் அது வருமாறு:- சுவச்சந்தத்தில்,

यन्न दृष्टं पशुज्ञानैः कुपथभ्रान्तदृष्टिभिः ।
यन्न सांख्यैर्न योगैर्वा न च वै पाञ्चरात्रिकैः ॥
स्वभाववादिभिश्चापि न च कर्मप्रवादिभिः ।
नापि संशयवादैश्च न च क्षपणवादिभिः ॥
न भूतवादिभिश्चैव नापि स्याल्लौकिकैरपि ।
न चात्मचिन्तकैर्वापि षट्पदार्थपरायणैः ॥
न चापि न्यायवादैश्च हेतुदृष्टान्तवादिभिः ।
नाप्येकजन्मवादैर्वा नानाप्येकत्ववादिभिः ॥
न धौतवादैर्लोकैर्वा न परिज्ञातमक्षरम् ।
इत्येवं वादिनां तेषां भेदानां तु शतत्रयम् ॥
त्रिषष्टिरधिकाश्चान्यवादिनां भ्रान्तचेतसाम् ।
अज्ञानतिमिरान्धानामुन्मीलनकृदुत्तमम् ॥

संसारपङ्कमग्नानां तमोनुदमिदं परम् ।
परमेशमुखोद्गीर्णं यन्मया प्रोक्तमद्भुतम् ॥

எனக் கூறியவற்றுள் இவ்விரண்டும் உளவெனக்கோள்க.

6 * * *

"நன்றுணர்ந்து முத்திபெற" என்றது முன்னிறுத்த முறையானே அகச் சமயத்துக்குப் புறச்சமயமானவற்றுள் வாமபேதம் கூறத்தொடங்கி முதற்கண் வாம மதத்தின் பொதுவியல் கூறுகின்றது. ஈண்டு வாம மென்றது சாம்பவத்தை. அது,

वामं हि शाम्भवं शास्त्रं दक्षिणं भैरवात्मकम् ।
मिश्रं यामलमित्युक्तं सप्तमातृप्रधानकम् ॥

என்பதனுலறிக.

शैवं पाशुपतं वामं भैरवं तु महाव्रतम् ।
कालामुखमिति ख्यातमन्तः समयषट्ककम् ॥

என அசிதாகமம் கூறும் ஆறனுள் யாமளம் கூறிற்றில்லையாலோஎனின், மிச்சிரம் என்பது வாமபைரவத்துள் அடங்குதலின் வேறு கூற வேண்டா என்க. இனி நவயாமள மாமாறு, ஞானசித்தியில்

नवशक्तिविधिप्रोक्तं नवमूलं तु यामलम् ।
तच्छाक्तं शाम्भवं शैवं तत्तत्त्वं सिद्धिशाम्भवम् ॥
मूलागमं तु सन्मार्गं सहमार्गं शिवागमम् ।
सन्मार्गं सहमार्गं च मूलदिव्यागमोदितम् ॥
नवागमरहस्यार्थोद्भवोऽष्टाविंशतोदयः ।
शक्त्युक्तं यामलोद्भेदं नवभेदमनेकधा ॥

என்னும் வசனத்தால் உணர்க. நவாகமமாவன.

1. पारतन्त्वरागम्   2. परमागमम्   3. शिवागमम्
4. शक्त्यागमम्   5. कलागमम्   6. देवप्रसादम्
7. पारतन्त्रावतारम्   8. शिवाज्ञासारम्   9. शिवसादाख्यप्रसादम् ।

எனவரும். பிறவும் உளவேற் காண்க. இவை கூறும் சித்தாந்தமும் ஒன்பது வகையாம். அவை:-

नवधा चेति संप्रोक्तो नवतन्त्रैकगोचरः ।
वामश्च मन्त्रवादश्च यन्त्रवादस्ततःपरम् ॥
तथा चौषधवादश्च कर्मवादस्तथैव च ।
अद्वैतवामसिद्धान्तो द्वैतवाममतः पुनः ॥
मिश्रवाममतः पश्चाद्वामसिद्धान्त इत्यपि ।

என்னும் வசனங்களால் அறியப்படுவன. இவை அனைத்தும் சங்கிரகமாக மூவகைப்படும் எனவும் வரும்;

वामं तु त्रिविधं प्रोक्तमनादिः पूर्वपश्चिमम् ।

எனச் சிந்தியவிசுவசாதாக்கியம் கூறலின். இம்மூன்றும் வேறுருவாற்றால் வரும் பேதம் என்பாரும் உளர். பிறவும் அறிக. இனி உலோகாயதாதி புறச்சமயமாமாறு:

न्यायो वैशेषिकश्चैव बौद्धश्चैवार्हतस्तथा ।
लोकायतश्च साङ्ख्यश्च मीमांसो वैष्णवस्तथा ॥
न्यायाद्यष्टकभेदोऽयं बहिःस्थः समयार्थकः ।

இனி, பைரவ முதலாகிய அகச்சமயமாமாறு:

शैवं शिवाद्वयं चैव शिवसंमेलनं त्रिधा ।
पश्चात्पाशुपतं चैव कालामुखमहाव्रतम् ॥
वामभैरवयोर्भेदाः शैवस्याभ्यन्तराष्टकः ।

எனச் சித்தாந்தங் கூறுமாறே வாமத்தினும் கண்டு கோள்க. ஈண்டு வாமம் என்றது வாம சித்தாந்த மொழிந்த பூருவபக்ஷமாயுள்ள வாம பேதங்களை;

சௌமிய சைவத்தில் ஞாஞந்தமொழிந்த பூருவபக்ஷமாயுள்ள கர்மாந்த பேதங் களைப்போல. மற்றும் விரித்துக்கொள்க.

7 * * *

............ல நவவிதத்...........னென்பது வாமிமதமும் மறுப்புங் கூறுகின்றது ஈண்டு உலகிற்கெல்லாம் பதி சத்தியன்றிப் பிறரில்லை என்றதற்கு வசனம் சுவச் சந்தத்தில்,

ब्राह्मी च वैष्णवी शक्तिरधिकारवहा मता ।
यमधिष्ठाय चात्मानं तत्संज्ञां संप्रपद्यते ॥
तद्विकारं च कुरुते शक्तिर्या परमेश्वरी ।
ब्रह्मविष्ण्विन्द्ररुद्राश्च विद्येशा ईश्वराः शिवाः ॥
लोकपालाष्टमूर्तीशा मूर्त्यधीपगणेश्वराः ।
लोकाधिपाश्च देवेशि तथैव भुवनाधिपा : ॥
ग्रहादिरुद्रमातारो योगनक्षत्रराशयः ।
शक्तिसंज्ञास्तु ते सर्वे भवन्ति तदधिष्ठिताः ॥
तत्पराक्रमवीर्यास्तु स्वकीये तु पदे स्थिताः ।
शक्त्यधिष्ठितचैतन्याः साकाराः क्रिययोद्यताः ॥

என் வருமாற்ருன் உணர்க. இவ்வாறு வரும் விரிவு வாம தந்திரத்திற் கண்டு கொள்க. "சிவனென்று சொல்லுவதும் சத்தியைத்தானே" என்பதற்கு வருமாறு:

जगच्छक्तिमयं व्याप्तं जगच्छक्तिमयं शिवम् ।
जगदुत्पद्यते शक्तेः शक्तिस्तु परमः शिवः ॥

என்பது. "வாலறிவின் வழிபடவே முத்தி வரும்" என்புழி முத்தி சித்திக்கும் உபலக்ஷணம் அது,

जन्तोरपश्चिमतनोः सति कर्मसाम्ये निःशेषपाशपटलच्छिदुरा निमेषात् ।
कल्याणि देशिककटाक्षसमाश्रयेण कारुण्यतो भवति शाम्भवदेवदीक्षा ॥

—அம்பாஸ்துதி 11

ஈண்டுக் கூறிய சாம்பவதீக்கை சாத்த தந்திரத்தை யனுசரித்தது.

हर्तुं त्वमेव भवसि त्वदधीनमीशे संसारतापमखिलं दयया पशूनाम् ।
वैकर्तनी किरणसंहतिरेव शक्ता घर्मं निजं शमयितुं निजया हि वृष्ट्या ॥

—அம்பா. 24

என்னும் இதனுல் பசு பாச பதிகளின் இலக்கணமும் சிந்தாந்தம் போலவே தெளிவாம்.

भोगाय देवि भवतीं कृतिनः प्रणम्य भ्रूकिङ्करीकृतसरोजगृहासहस्राः ।
चिन्तामणिप्रचयकल्पितकेलिशैले कल्पद्रुमोपवन एव चिरं चरन्ति ॥.

—அம்பா. 23

எனவும் பிறவும் வருமாற்ருன் உணர்க. மற்றும் விரிவிற் கண்டு கோள்க. இதன் மறையில் "இறைமுத லதற்குத் தபனனேனக்கதிர்க்கு" என்றதற்கு வருமாறுः-

प्रभया तु विना यद्वद्भानुरेव न विद्यते ।
विना शक्त्या तया तद्वत्स शिवोऽयं न विद्यते ॥
अपि धर्मी शिवः प्रोक्तो धर्मः शक्तिरितीर्यते ।

இதனுனேயன்றே,

शक्तिः शरीरमधिदैवतमन्तरात्मा ज्ञानं क्रिया करणमासनजालमिच्छा ।
ऐश्वर्यमायतनमावरणानि च त्वं किं तन्न तद्भवसि देवि शशाङ्कमौलेः ॥

—அம்பா. 25

எனச் சிவன் சுவாமி, சக்தி சுவம் எனக் கூறியவாறும் என்க. இனி, "விசுவ மெல்லாஞ் சத்தி வடிவாயிற் றேன்றி நசித்தலால் கெடுமேன்பதன்றியுரனுடையோர் நவினேறியும் கெடும்" என்றது, சிவஞானபோதத்தில்,

आदृश्यं चेदसद्भावो दृश्यं चेज्जडिमा भवेत् ।

என்றதுபற்றி. ஆயின்,

व्योमेति बिन्दुरिति नाद इतीन्दुरेखारूपेति वाग्भवतनूरिति मातृकेति ।
निष्यन्दमानसुखबोधसुधास्वरूपा विद्योतसे मनसि भाग्यवतां जनानाम् ॥

—அம்பா. 3

என்ருற்போல வருவதேன்னேயோ எனின் அஃது உபாசனுவிஷயம். அன்றி,

यामामनन्ति मुनयः प्रकृतिं पुराणीं विद्येति यां श्रुतिरहस्य गिरो गृणन्ति ।
तामर्धपल्लवितशङ्कररूपमुद्रां देवीमनन्यशरणः शरणं प्रपद्ये ॥

—அம்பா. 1

எனவும்,

विद्यां परां कतिचिदम्बरमम्ब केचिदानन्दमेव कतिचित्कतिचिच्च मायाम् ।
त्वां विश्वमाहुरपरे वयमामनामः साक्षादपारकरुणां गुरुमूर्तिमेव ॥

—அம்பா. 27

எனவும் வந்ததூஉம் அதிட்டிக்கும் தன்மையாலும் வியாபகத்தினுலும் முன் கூறியவாறே வழிபாட்டினுலும் சத்தியின் ஆற்றலை வெளிப்படுப்பதன் மேற்று; இதனுனேயன்றே 'சிலர்' என்று விகற்பித்துக்கூறியது. பிறவும் விரித் துணர்க.

* * *

8

"பகருமா மந்திரங்கள்" என்பது மந்திரவாமி மதமும் மறுப்பும். பொருள் வெளி, இம்மதம் வருமாறு:- சர்வசித்தாந்த விவேகத்தில்,

अथातो मन्त्रवादश्च सङ्ग्रहेण निगद्यते ।
मन्त्रोपासनया मुक्तिः सह प्रागुक्तवर्त्मना ॥
नमःस्वाहा स्वधा वौषट् वषड्हुं फड्विभेदतः ।
सप्तकोटि महामन्त्राः सर्वकृत्यविधायिनः ॥
साक्षाच्छक्तिस्वरूपास्ते नत्वन्ये च, तथा वचः ।
मननं सर्ववेदित्वं त्राणं संसार्यनुग्रहः ॥
मननत्राणसंयोगान्मन्त्र इत्यभिधीयते ।

இச்சுலோகத்தில் சத்தி என்னும் சொல் எஞ்சி நின்றது.

इत्यतोऽपि स्फुटं तस्मान्मन्त्रज्ञानपुरःसरम् ।
मन्त्रोपासनया मुक्तिर्मन्त्रवादे निरूपिता ॥

என்பது. இதன் மறை தானே விளங்கும்.

௯ * * *

"மந்திரமும் தந்திரமும்" என்பது இயந்திர வாமிமதமும் மறுப்பும் கூறுகின்றது. இதன் பொருள் வெளி, "மறுப்பினே..................வழிவருதலினு" லென்றது மந்திரவாதியொருவன் கற்பித்த ரேகையாய் வருதலினுல் என்றவாறு இம்மதம் சருவசித்தாந்த விவேகத்தில்,

अथातो यन्त्रवादे तु वामतन्त्रोक्तवर्त्मना ।
तद्यन्त्रसेवया सर्वं सिध्यतीति विनिश्चयः ॥
सर्वत्रापि विना यन्त्रं मन्त्रभेदेन किं फलम् ।
तन्त्रभेदेन वा तस्मात्सर्वं यन्त्रेण सिद्ध्यति ॥
अणिमा महिमा चैव गरिमा लघिमा तथा ।
ईशत्वं च वशित्वं च प्राप्तिः प्रकाम्यमेव च ॥
ततोऽन्ये सिद्धिभेदाश्च कथ्यन्ते कर्षणं पुनः ।
मोहनं च तथा चोच्चाटनं स्तम्भनमेव च ॥
मारणं च तथा विद्वेषणं भेदनमित्यपि ।
लोकान्तरेषु भोगश्च मुक्तिश्चेति विनिश्चयात् ॥
साक्षाच्छक्तिस्वरूपं तद्यन्त्रमेवात्र सेव्यते ।
तदङ्गत्वेन मन्त्रादि सेवातुल्यं च सम्मतम् ॥

என்பது.

10 * * *

"வரையுமியந் திரமாதி கருதவேண்டா" என்பது ஔஷதவாமி மதமும் மறுப்புங் கூறுகின்றது. ஈண்டு "மறுப்பில் முத்தி நெறியுணர்வு" என்றது ...."தின்பண்டம் காயம் போன்றுதலால்" என்றது அவன்நித்திய மென்றதற்கு மறை. மற்றனைத்தும் வெளி. இம்மதம் சருவ சித்தாந்த விவேகத்தில் வருமாறு:-

अथात्रौषधवादे तु सर्वमौषधसेवया ।
साध्यमेवेति सिद्धान्तस्तद्धि शक्त्यात्मकं मतम् ॥
ततस्तत्तन्त्रसंसिद्धकायकल्पादि सेवया ।
मण्डलाद्युक्तकालेन जननादिश्च नश्यति ॥

174

देहकान्तिर्महत्त्वं च देहस्य नियतं भवेत् ।
आकाशगमनादिश्च सिद्धिर्मुक्तिश्च सिद्ध्यति ॥
किं फलं मन्त्रयन्त्रादिसेवयेति विनिश्चितः ।

என்பது

11 * * *

(5) "அன்றே நல்வினை" என்பது கருமவாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. ஈண்டு நல்வினை யென்றது முத்தியை. மற்றனைத்தும் வெளி. இம்மதம் சருவ சித்தாந்த விவேகத்தில் வருமாறு:-

अथातः कर्मसिद्धान्ते सर्वं कर्मवशादिति ।
औषधेन तथा यन्त्रमन्त्रजातैश्च किं फलम् ॥
जातं क्षयं सुखं क्लेशं वार्धकं मरणं तथा ।
एवमुक्तं तु षट्कं च गतसंकल्पनिश्चयम् ॥
जन्मारोग्यं श्रुतं श्रीजनितमथ यशो बन्धुदाराश्च पुत्रा
भृत्याःक्षेत्रं गृहाःस्युर्वितरणमपि गीर्देहकान्तिर्महत्त्वम् ।
प्रीतिर्मित्रं सखायः शुभमपि च विपत्कालमृत्युर्नराणां
पूर्वाभ्यासानुरूपं विधिविहितवशादेति कालं प्रपद्ये ॥
इत्यतो हि नवीनैः किं स्वप्रयत्नैस्तथाविधैः ।
अत एव तथा लोके शास्त्रेष्वपि च विश्रुतम् ॥
भवितव्यं भवत्येव नालिकेरफलाम्बुवत् ।
गन्तव्यं गच्छति सदा गजभुक्तकपित्थवत् ॥
कुब्जं च काणं विकलं च पङ्गुं मूकं च मूर्खं मतिविभ्रमं वा ।
देवानुकूलेन वृणोति सम्पन्न पौरुषं कुत्रचिदस्ति कान्ते ॥
इदं मया प्राप्तमिदं प्रपत्स्ये इदं करोमीति वृथा जनोऽयम् ।
वदत्यहोऽज्ञानवशोऽनवद्ये न पौरुषं कुत्रचिदस्ति कृत्ये ॥
सपुत्रदारः सपशुर्धनाढ्यः सामर्थ्यतोऽस्मीत्यवपद्यते यः ।

स विप्रकर्षे किमुपैति शोकं द्विपात्पशुर्ज्ञानबहिष्कृतश्च ॥
इति सञ्चित्य कर्मानुसारिणी बुद्धिरित्यतः ।
न्यायादेव यथा बुद्धिर्यत एव प्रवर्तते ॥
तथा तत्र प्रवृत्तः सन्नान्यथा कुत्रचित्स्वयम् ।
सुखदुःखादि विषये नालसो मुक्तिभाग्भवेत् ॥
इत्येवं कर्मवादश्च कथितः सङ्ग्रहेण तु ।

12 * * *

"ஞானவடிவாஞ் சித்தி" என்பது அத்துவிதவாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. இது தானே பொருள் விளங்கும். அது வருமாறு:- சர்வ சித்தாந்த விவேகத்தில்,

अद्वैतवादिपक्षे तु सर्वं शक्तिविवर्तकम् ।
तथा शक्तिविवर्तेन विना किञ्चिन्न दृश्यते ॥
कर्म माया च लोकश्च तथा जीवेश्वरौ शिवः ।
पशुपाशादि सर्वं च विना शक्त्या न हि स्फुटम् ॥
इति विज्ञानमात्रेण मुक्त एव भवेन्नरः ।
ब्रह्महा मद्यपः स्तेयी त्वगम्यागमनोऽपि सः ॥
कुतो वा कर्मणा मुक्तिस्तथैव श्रूयते वचः ।
ज्ञानादेव हि कैवल्यं नान्यथा कर्मकोटिभिः ॥
नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि ।
इत्यादिवचनं सर्वमज्ञानिविषयं मतम् ॥
एवमद्वैतसिद्धान्तो वामभेदे निरूपितः ।

என்பது.

13 * * *

"திகழ்ந்த பராசத்தியை" என்பது துவித வாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. பொருள் வெளி. அது சர்வசித்தாந்தவிவேகத்தில் சொல்லப்பட்டது.

द्वैतवामागमे सिद्धः पदार्थस्त्रिविधो मतः ।
शक्तिः पशुश्च पाशश्च नत्वेका शक्तिरित्यथ ॥
आत्मा च शक्तिवत्साध्यस्ततः सर्वज्ञतादिमान् ।
अनादौ मलसम्बन्धात्तज्ज्ञानादि न राजते ॥
तथा ज्ञानादिसंसिद्धौ शाक्तदीक्षापुरःसरम् ।
गुरोरेव मुखात्प्राप्ततन्त्रज्ञानपरायणः ॥
चर्यया वाथ योगेन पूजादिक्रियया पुनः ।
उपास्त्या शक्तिभेदानां साक्षाच्छक्तेरतोऽथवा ॥
मुक्त एव भवेन्नायं केवलेन तु कर्मणा ।
विज्ञानेन च मुक्तात्मा शक्त्या च भ्राजते सदा ॥
मुक्तौ सुनिर्मलः सर्वज्ञताधर्मादिसंयुतः ।
इत्येवं द्वैतवामाख्ये सिद्धान्तश्च निरूपितः ॥

என்பது.

14 * * *

"அரனறிவு" என்பது மிச்சிரவாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. இதுவும் வேளி. அது சர்வசித்தாந்த விவேகத்திலே சொல்லப்பட்டது.

अथातो मिश्रवामे तु पृथक्त्वेऽपि परस्परम् ।
त्रयाणां च पदार्थानां व्याप्त्या तस्याश्च शक्तितः ॥
सर्वेषां मिश्रसिद्धान्ते सर्वं शक्तिमयं स्मृतम् ।
शिवश्च तस्य देहश्च ज्ञानावरणमेव च ॥
तथात्मा तस्य देहादि तदेवं भुवनानि च ।
शक्तिरूपमिति ज्ञात्वा शाक्ततन्त्रोक्तवर्त्मना ॥
साध्या च मधुमांसादिसंपादनपुरःसरम् ।
पूजया होमतो वाथ जपेन ध्यानतः पुनः ॥
शक्त्युपासनया मुक्तिर्मुक्तः शक्त्यात्मको भवेत् ।

न शक्तेर्भिन्न एवायं शक्त्या मिश्रो यतः पुनः ॥
न समश्च भवेच्छक्त्या तथानेकेशवादतः ।
इत्येवं मिश्रवामे तु तदर्थोऽपि निरूपितः ॥

என்பது.

"தாங்கு மாதார சத்தி" என்பது சித்தாந்தவாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. பொருள்வெளி. இம்மதம் வருமாறு:- அதிலேயே. (9)

अथातो वामसिद्धान्तः संग्रहेण निरूप्यते ।
वामाद्यष्टागमप्रोक्तमङ्गीकृत्य यथोचितम् ॥
प्रत्यक्षादीनि मानानि प्रागुक्तान्येव तानि वै ।
शक्तिश्च पशुपाशौ च पदार्थस्त्रिविधो मतः ॥
अनन्या शक्तिरन्येषां सर्वेषां व्याप्तितो मता ।
वामादिषु च सर्वेषु कृतकृत्योऽत्र साधकः ॥
तीव्रतीव्रतरत्वेन शक्तिपातेन संयुतः ।
शाम्भवीदीक्षया मुक्तः सदुपायबलेन च ॥
सदुपायस्तु सन्मार्गज्ञानयोगादिकः स्मृतः ।
आधाराद्या बहुविधा सा ह्यनुग्रहरूपिणी ॥
ध्येयाऽऽदित्यादिवद्ध्यानात् सा शक्तिः पारमेश्वरी ।
इत्येवं वामसिद्धान्तः संग्रहेण समीरितः ॥

என்பது.

இவ்வாறுயின், முதற்கட்கூறிய வாமமதத்திற்குப் பேதம் என்னையோ எனின்..அது எல்லாம் சத்தி பரிணமம் என்னும் பரிணமவாதமாகலிற் பேதமுண்டு என்க. அது வருமாறு:- அந்தச் சருவசித்தாந்த விவேகத்தில்,

आदितो वामपक्षे तु तत्सिद्धान्तो निरूप्यते ।
शाक्तं सामान्यतः प्रोक्तमङ्गीकृत्य यथोचितम् ॥
शक्तिरेव जगत्कर्त्री सा पुनः स्यात्सहस्रशः ।

समारभ्य पराशक्तेः क्रियाशक्त्यन्तभेदतः ॥
तद्रूपपरिणामेन जगत्सर्वं चराचरम् ।
मन्त्रेश्वरादयः सर्वे ततोऽन्ये जीवकोटयः ॥
वष्कादिशब्दभेदश्च तत्त्वाद्यर्थमिदा पुनः ? ।
ज्ञेयभेदाश्च ज्ञानं च ज्ञापकश्च ततोऽन्यथा ॥
यदस्ति सर्वं तच्छक्तिमूर्तिरूपं तथा जगत् ।

என்பதும்,

स्थूलासु मूर्तिषु महीप्रमुखासु मूर्तेः
कस्याश्च नाम तव वैभवमम्ब यस्याः ।
पत्या गिरामपि न शक्यत एव वक्तुं
साऽसि स्तुता किल मयेति तितिक्षितव्यम् ॥

—அம்பா. 30

என்பதும்,

शिवरूपं च सा शक्तिर्बहुनोक्तेन किं पुनः ।
एवं विज्ञानवान् मूलनवसिद्धान्त (यामलागम) वर्त्मगः ॥
वैष्णवादिषु बाह्येषु शैवभेदेषु वा पुनः ।
भैरवादिषु भेदेषु कृतकृत्यः पुरा नरः ॥
कर्मसाम्यादिसंसिद्धशक्तिपातविशेषतः ।
वामतन्त्रोक्तमार्गेण सद्गुरोर्लब्धदीक्षया ॥
चर्यादीनामनुज्ञानात् साधको मुक्तिभाग्भवेत् ।
इत्येवं वामसिद्धान्तः कथितः सङ्ग्रहादिह ॥

என்பதும்.

16 * * *

"இன்னணம்" என்பது வாமத்தின் புறச்சமய அகச்சமய பேதமதமும் மறுப்பும் கூறுமாறு பொதுப்படக் கூறியது. புறச்சமயமாவன, முற்கூறியவாறே நியாயாதிகளெட்டுமாம். அகச்சமயமாவன, சைவாதிகள் எட்டுமாம். அன்றி,

लोकायतोऽथ बौद्धश्चार्हतो मीमांस एव च ।
मायावादः पाञ्चरात्रं षडेते समया बहिः ॥
शैवं पाशुपतं वामं भैरवं तु महाव्रतम् ।
कालामुखमिति ख्यातमन्तःसमय षट्ककम् ॥

எனவரும் ஆறு எனினுமாம். அது,

"ஒன்றது பேரூர் வழியா றதற்குள
வென்றது போலு மிருமுச் சமயமும்
நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே" 1555

என்னும் திருமந்திரமாலையானும் உணர்க. இஃதிரட்டுற மொழிதல் பற்றி நின்றது. இனிப் பூருவபக்ஷங்களைப் புறமாக நிராகரிப்பதன்றித் தத்தந் தந்திரபேதமான அத்துவிதாதி வாம பேதங்களையும் வைத்து நிராகரிக்கிறது எல்லாமதத்திற்கும் ஒக்குமேனும், ஈண்டு அகச்சமயமான காளாமுக பாசுபத மகாவிரத வைரவாதி கட்கும் உண்டேன்பது தோன்ற "அகச்சமயத்தெல்லாமுண்டாம்" என்றுவிதந்தது. அகச்சமயங்கள் பெரும்பான்மையும் உலகத்து வழங்காமையின் இப்பேதங்கள் அவற்றிற்குண்டோ இன்றோ என்னும் ஐயமறுத்தற்கும் அதனையே பின்னும் வற்புறுத்தற்கும் "வாமஞ் சுத்த சைவமென்றிரண்டிற் கண்டிடலால்" என்றது. ஈண்டுச் "சுத்த சைவம்" என்றது அகச்சமயத்துளேடுத்த தக்ஷிண மதத்தை. அது மேல் விளங்கும். இதனனே யன்றே சித்தாந்தத்திலும் புறச்சமயம் ஆறும் அகச்சமயம் ஆறும் அன்றி,

शैवभेदं प्रवक्ष्यामि ऐक्यपाषाणवादिनौ ।
भेदवादी समवादी सङ्क्रान्ती चाविकारवान् ॥
परिणामी च शैवश्च सिद्धान्ती पर ईरितः ।

என்பனவும் பிறவும் வந்ததூஉம். இவ்வாறு பிறவும் வைத்து மறுப்பிற் பெருகு மாதலால் இந்த நியாயங்கொண்டு மற்றும் ஊகத்தான் நிராகரிக்கக்கடவதெனக் கூறுவான், இங்கு "மறுத்துப்போன மறையு மேனை அகச்சமயத்து மியம்பலாம்" என்றது.

17 * * * *

"இத்திறத்திற் சித்தி" என்பது இவ்வாறு புருஷார்த்த தாயகமான வாமத்தைப் பூருவ பக்ஷமென்றும் அகத்திற்குப் புறம் என்றுஞ் சொல்லியதற் கேது கூறியது. "ஈண்டுச் சக்திதத்துவப் பிராப்தி சக்த்யபி வியக்தி யேன்றது.

शक्तितत्त्वे तदद्वैताः शिवतत्त्वे परे स्थिताः ।

என்னும் சித்தாந்த ரகசியத்தாற் காண்க.

அவ்வாறு வந்தது மேலுள்ள சிவத்தை யறியாமையின். இம்மதமகப் புறமானது.

वामं च दक्षिणं चैव तद्द्वयोर्मिश्रकं तथा ।
शैवा बाह्याः समाख्याताः शैवा अपि न पूजिताः ॥

என முற்காட்டிய சுப்பிரபேத வசனத்தாலுணர்க.

18 * * *

"மறையவர்தாம் வேள்வியில்" என்பது வேதத்திற் சொன்னவாறே மாம்ஸபக்ஷணம் போல வாமநூலிற் சொன்னவாறே மதுமாமிச நுகர்தல் குற்ற மன்று என்பதை மறுத்தது; இருவரும் பூருவ பக்ஷிகளென்பதோத்தலின் பிறவேளி.

19 * * *

"கருது வாமிகள் சூலம்" என்பது வாமசமயிகள் வேடநிலை கூறியது. அது,

शङ्खास्थिभूषणैर्युक्तं मद्यमांसं तु सेवितम् ।
शूलं कपालं खट्वाङ्गमित्येतच्छाक्तलक्षणम् ॥

எனக் கூறப்பட்டது. பிறவும் இம்மத மறுப்பின் வேண்டுவன விரித் துரைத்துக்கொள்க,

இங்ஙனம் கூறியவற்றுள் ஐந்து பாடல் அகச்சமயம் படும் பகுப்பும் மறுப்பும் போகப் பதினுன்கு பாடல் வாமமதமும் மறுப்புமாம்.

இனி வைரவ மதம்

20 * * *

"தக்க வகையான்" என்பது வைரவ மதவாதிகள் பெறும் புருடார்த்தம் கூறுமுகத்தால் அவர் வேட நிலையும் கூறுகின்றது. அந்த வைரவ சைவர் வேட லக்ஷணம்,

शङ्खं च कुण्डलं चैव कृष्णकंचुकसंयुतम् ।
शूलं डमरुकं चैवमिति भैरवलक्षणम् ॥

என அறியத்தக்கது.

21 * * *

"மன்னு வைரவம்" என்பது மற்றப் புறமதம் யாவையும் பூருவ பக்ஷம், வைரவ மதமே சித்தாந்தம் என்கிறது. ஈண்டுப் "பைரவந்தானுயர் முகத்தி ளுகுமாறு'

शैवं पूर्वमुखोत्पन्नं दक्षे कालामुखं तथा ।
पश्चिमे पाशुपतकमुत्तरे तु महाव्रतम् ॥
ऊर्ध्ववक्त्रे भैरवं च पाताले वाममुच्यते ।

என முற்கூறிய தக்ஷிணுகம வசனத்தால் உணர்க. பிற வெளி.

22 * * *

"ஒருமை.........." என்பது வைரவ தந்திரங்களிவை என்பதும், அவற்றின் பிரமேயம் இவ்வாறென்பதும் கூறுகின்றது. ஈண்டுக்கூறிய வைரவ தந்திரங் களாமாறு,

भैरवस्याष्टभेदाश्च चतुः षष्ट्यपभेदकाः ।
वामः षोडशभेदश्च तत्तद्भेदमनेकधा ॥

என்னும் ஞானசித்தி வசனத்தால் உணர்க. ஈண்டு "வைரவம்" என்றது சுத்த சைவ தக்ஷிணமென்றும், மற்றது வாமம் என்னும் வைரவ பேதம் என்றும் கூறுவாரும் உளர். இனிக் "கதிரவன்றன் கிரணம் போல் அவன் குணங்கள் சத்தி" என்றது சாத்த மத மறுப்புத்தோன்ற. மற்றனைத்தும் மேல் விளங்கும்

23 * * *

"ஐந்தொழிலு மியற்றுமல் இயற்றும்" என்பது பதி இலக்கணம் கூறு முகத்தால் ஜகத் சிருஷ்டிக்கிரமம் கூறுகின்றது. அது வருமாறு. சுவச்சந்தத்தில்,

देवदेवो जगन्नाथः परमात्मा शिवोऽव्ययः ।
पूर्वानुक्रमयोगेन अकामात्सृजते जगत् ॥

आदित्यस्य मणिर्यद्वत्तापितो रविरश्मिभिः ।
वह्निः संजायते तत्र न रवेस्तत्र कामना ॥
मणेरपि न कामित्वं तद्वद् देवस्य चेष्टितम् ।
आदित्यवच्छिवो ज्ञेयः शक्ती रश्मिरिव स्थिता ॥
ऋतुकालमनुप्राप्य कालोऽङ्कुरनियोजकः ।
शिवः शक्तिसमावेशात्तद्वच्च जगदुद्भवः ॥

எனவும், அதிலேயே சிருஷ்டி படலத்தில்,

योऽसौ देवः परः सूक्ष्मः कारणः सर्वगः शिवः ।
निमित्तकारणं सोऽत्र कथितस्तव सुव्रते ॥
अकामात्सृजते सर्वं जगत्स्थावरजङ्गमम् ।
ज्ञानशक्त्या पुनश्चैव समालोक्य वरानने ॥
इच्छाशक्त्या समाविष्टः क्रियाशक्त्या च सुव्रते ।
मायातत्त्वं जगद्बीजं नित्यं चाप्रभु चाव्ययम् ॥
तत्स्थं तच्चात्मवर्गं तु युगपत्क्षोभयेत् प्रभुः ।
हेलादण्डहतं देवि बदर्यास्तु फलं यथा ॥
तिर्यगूर्ध्वमधश्चापि निर्गच्छन्ति समन्ततः ।
मुक्तेस्तु भाजनं ये तु अनुध्यानाच्छिवेन तु ॥
ऊर्ध्वं गच्छन्ति ते सर्वे शिवं परमनिर्मलम् ।
विद्याया भाजनं तिर्यग्मन्त्ररूपा भवन्ति वै ॥
संसारभाजनं ये तु मलकर्मकलान्विताः ।
ते वै व्रजन्त्यधस्तात्तु घोरे वै चातिदारुणे ॥

எனவும் அறியத்தக்கது.

24 * * *

"மேலதேனப் போனது" என்றது மாயை மூவகைப்படும் என்று கூறு முகத்தாற் சுத்த மாயையிற் சிவ தத்துவத்தோற்றம் கூறியது. அதனே மாயா பேதத்திற்கு உதாகரித்தவற்றுட் காண்க. மற்றவற்றிற்குத் தோற்றம் வருமாறு, சுவச்சந்தத்தில்.

अकामात्सृजते सर्वं जगत्स्थावरजङ्गमम् ।
स्वतेजसा वरारोहे होमां (व्योमां) संक्षोभ्य लीलया ॥
उपादानं तु तत्रोक्तमक्षुब्धं समवायतः ।
ततः शून्यं समुत्पन्नं शून्यात्स्पर्शसमुद्भवम् ॥
तस्मान्नादः समुत्पन्नः पूर्वं वै कथितस्तव ।

என வரும்.

25 * * *

"நாதம்நவ விதமாகும்" என்பது முற்கூறிய நாதபேதமும் அதிற்றேன்றிய விந்து பேதமும் கூறுகின்றது. அதுவருமாறு: சுவச்சந்தத்திலேயே,

अष्टधा तु स देवेशि व्यक्तः शब्दप्रभेदतः ।
घोषो रवः स्वनः शब्दः स्फोटाख्यो ध्वनिरेव च ॥
झङ्कारो हुङ्कतिश्चैव अष्टौ शब्दाः प्रकीर्तिताः ।
नवमस्तु महाशब्दः सर्वेषां व्यापकः स्मृतः॥
नदते सर्वदा योऽसौ सर्वभूतेष्ववस्थितः ।
